மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கெனவே நேரடியாகத் தான் ஓய்வூதியத்தைப் பெறவேண்டும் என்ற நிலை இருந்தது. இப்பொழுது நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளவும், தேவையானால் 'மணி ஆர்டர்' மூல மாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு நினைவு. அண்மையில் அப்படி உத்தரவு போட்டதாக நினைவு. தனிக் கேள்வி போட்டால் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்

***28 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை எந்தெந்த வகைகளில் அரசு வழங்குகிறது ?

(இ) அதற்கு மத்திய சர்க்கார் செய்யும் உதவி எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசியல் தியாகிகள் களின் குழந்தைகளுக்கு (1) கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தும் (2) புத்தகங்கள், கல்வி சிறப்புக் கட்டணம், விடுதிச் செலவு ஆகியவற்றிற்கு படிப்பு உதவித் தொகை வழங்கியும் சலுகைகள் காட்டப்படுகின்றன.

(இ) இதற்காக ஏற்படும் செலவினத்தில் 50 சதவிகிதத்தை மத்திய அரசு ஏற்கிறது.

திரு. என். கிட்டப்பா : மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளுடைய குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிப் போராட்டத்தில் தீக்குளித்து இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஓய்வூதியம் அளிக்கின்ற ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் அளிக்கும் முயற்சி எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether the list of political sufferers had been prepared separately by the State Government and concessions given or has it been prepared in consultation with the Central Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசினர் 50 சதவீதம் வரை செலவினத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்களையும் கலந்தாலோசித்துத்தான் உத்தரவு வழங்கப்படுகிறது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. பரந்தாமன்: சில அரசியல் தியாகிகள் ஆறு மாதங்கள் சிறைச் சாலையில் இருந்துங்கூட, அவர்களிடத்தில் அதுகுறித்த சான்றுகள் இல்லை. அப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்கும் சலுகை அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏதேனும் ஒரு சான்றிதழ் வழங்கவேண்டும் என்று சிலபல முறைகளை வகுத்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட முறைகளுக்கு உட்பட்டு வருகிறவர்களுடைய நிலையெல்லாம் கவனிக்கப் படும்.

திரு. த. சோனையா: போராட்டங்களில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றவர் களுக்கு எத்தனை காலம் சிறைக்குச் சென்றால் 'தியாகிகள்' என்று பட்டம் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும், விடை அளிக்கிறேன். மூன்று மாதங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு மேல் சிறைக்குச் சென்றிருந்தால் அவர்களைத் தியாகிகள் பட்டியலில் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கல்விச் சலுகைகள் எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் அமைச்சரவர்கள் கையில் இருந்தால் அதை அறிவிக்கலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பல்தொழில் நுணுக்க பள்ளிகளில் ஆறு பேர்களுக்கும், விவசாயக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், பொறியியல் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், சட்டக் கல்லூரியில் ஒருவ ருக்கும், மருத்துவக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மூன்று பேருக்கும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மூன்று பேருக்கும், தொழிற் பள்ளிகள், தொழிற்பயிற்சி மையங்களில் 20 பேர் களுக்கும், கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு வழங்கப் படுகிற இந்தச் சலுகை, கன்னியாகுமரி ஜில்லா தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காக தங்கள் உயிரையே நீத்து தியாகம் செய்தவர்களின் குடும்பத் தினர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குடும்பத்தினர்களுக்குத் தான் வழங்கப்படுகிறது. கனம் உறுப்பினர் சொல்வதைப் போன்று எடுப்பது

என்றால் ஏராளமான போராட்டங்கள் வந்து சேரும். இந்தியத் தாய்நாடு விடுதலை பெறுவதற்காக—விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் பட்டியல்தான் சேகரிக்கப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்கு வருவாய்-வருமான வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? விதிக்கப்பட்டிருந்தால் விதிவிலக்கு அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதன் விவரக்குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. சில குறிப்பிட்ட நிபந்தனைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டே உதவி அளிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குழந்தைகளுக்கே சலுகை அளிக்கப்படுகிறது, தமிழ்த் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்னாலாவது வழங்குவதற்கு ஏதாகிலும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

Bharata Natyam Course

* 29. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce Bharata Natyam Courses in Schools and Colleges in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பள்ளிகளில் உடற்பயிற்சிக்குப் பதிலாக பெண்களுக்குப் பரத நாட்டியம் கற்றுக் கொடுக்கலாம் எனச் சென்னையிலுள்ள லலிதா சுப்பிரமணியம் பரத நாட்டியப் பள்ளி 1—3—1972 அன்று யோசனை கூறி உள்ளது. அந்த யோசனை ஆய்வு செய்யப்பட்டுவருகிறது.

கல்லூரிகளில் பரதநாட்டியத்தைப் பாடமாகச் சேர்ப்பது பல்கலைக்கழகங்களைப் பொறுத்ததாகும்.